(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2 )
மாணவ-மாணவியருக்கு மட்டும்)

**SUBJECT CODE** | **22 PTM 208** |

**REG.NO** [ ]

**என்.ஜி.எம்.கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023**

**எம்.ஏ. – தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**இரண்டாம் பருவம்** **காலம் : 3 மணி நேரம்**

# இலக்கிய மானிடவியல்

## பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(K1)**

1. இந்திய சூழலில் வரலாற்று இனவரைவியலை உருவாக்கிய முன்னோடி யார்?
   அ) எமனோ ஆ) இராபர்ட் ஷேஃபர் இ) கே.சி. மிஸ்ரா ஈ) ஐராவதி கார்வே
2. சங்க இலக்கியத்தில் தினைப் புனக் காவல் வரும் 80 இடங்களில் ஆண்கள் தினைக்காவல் புரிந்தமை எத்தனை இடங்களில் இடம்பெற்றுள்ளது?
   அ) 4 ஆ) 5 இ) 6 ஈ) 12
3. "அணங்குஅருங் கடவுள் அன்னோள்" எனும் வரிகள் இடம்பெறும் நூல் எது ______________.
   அ) பெரும்பாணாற்றுப்படை ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) கலித்தொகை
4. ஓர் ஆண்டிலுள்ள பன்னிரு திங்களில் பத்து திங்கள் விழா கொண்டாடியதைப் பதிவுசெய்தவர் யார்?
   அ) சுந்தரரார் ஆ) மாணிக்கவாசகர்
   இ) திருஞானசம்பந்தர் ஈ) நக்கீரர்
5. சங்ககாலத்தில் கீழ்க்காணும் பருவத்தினரில் தழையாடை அணியாதவர் யார்?
   அ) பெதும்பை ஆ) அரிவை இ) மங்கை ஈ) மடந்தை

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை தருக.** **(K2)**

6. சேய்வழி அழைத்தல் – குறிப்புரைக்க.
7. ஆதி விவசாயி யார்? ஆதி விவசாயக்கருவி எது?
8. சூர் – குறிப்புரைக்க.
9. பூம்புகாரில் மயன் என்பவனால் உருவாக்கப்பட்ட பதுமையைக் குறித்து எழுதுக
10. சங்க இலக்கியத்தில் குடும்ப அமைப்போடு தொடர்புடைய சொற்கள் எவை?

## பிரிவு – ஆ (5 x 3 = 15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. அ) பண்பாட்டு ஆய்வுகளின் மூன்று இன்றியமையாத கட்டங்கள் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) பகுத்துண்ணுதல், பாதீடு, பண்டமாற்றம் குறித்து எடுத்துரைக்க..

(த.பி.பா.)

ETHICAL PAPER

12. அ) சங்க ஆயர் குடித் தலைவர்கள் குறித்து புலப்படுத்துக.

**(அல்லது)**

ஆ) நெய்தல் நில மக்களுக்கு இருந்த கடற்சூழல் சார்ந்த மரபறிவினை எடுத்துரைக்க.

13. அ) செவ்வியல் தொன்மங்களின் உட்கூறுகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) முருகனின் ஆயுதமான வேல்குறித்து பக்தவத்சல பாரதியின் கூற்றினை விவாதிக்க

14. அ) திருவிழாக்கள், இறைநிலையில் வேந்தர் மரபு மற்றும் மக்கள் மரபினை ஒப்பிடுக

**(அல்லது)**

ஆ) பண்பாட்டில் உயிர்ப்பலி – தாவரப்பலி குறித்து எழுதுக.

.

15. அ) சங்ககால குடும்பநிலைகளில் 'மணந்தகம்' குறித்து எடுத்துரைக்க.

**(அல்லது)**

ஆ) தழையாடை குறித்த தோற்ற தொன்மங்களை விவரிக்க.

**பிரிவு –, ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. a) சங்ககால இனக்குழுச் சமூகம் குறித்த தங்களது புரிதலைச் சங்க சான்றுகளுடன் விவாதிக்க.

**(OR)**

b) தமிழரின் சங்க, சமகாலத் தாய்வழிச் சமூகங்களை ஓப்பிட்டு விளக்குக.

17. a) தமிழகத்தில் சங்ககாலம் தொடங்கி சமகாலம்வரை நிலவிவந்த காட்டெரிப்பு வேளாண்மை குறித்து விவரிக்க.

**(OR)**

b) அலைகுடி – நிலைகுடி அசைவியக்கங்களை விவரிக்க..

18. a) "சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் குன்றக்குரவை இனவரைவியல் நோக்குடையது" எனும் கூற்றினை ஆராய்க.

**(OR)**

b) சிலப்பதிகாரம் ஒரு மீவியல் பனுவல் என்ற கூற்றினைச் சாலினி வாக்குரைத்தல் வழிநின்று நிறுவுக

19. a) இலங்கையில் பத்தினித் தெய்யோ மரபினை ஆராய்க

**(OR)**

b) பிற்சங்ககாலம் மற்றும் சமகாலச் சமயவிழாக்களை ஒப்பிடுக.

20. a) சங்ககாலக் குடும்பம் சமகாலக் குடும்பம் ஒப்பிடுக. .

**(OR)**

b) "சங்க தமிழர்களின் தழையாடை தமிழர்களின் இயற்கைசார்ந்த மரபறிவாகும்" என்ற கூற்றை நிறுவுக.

**************************